**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருN.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2023ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24 ஆம் நாள் வியாழகிழமை

**இ.ம.எண்.06/2023 இன் அ.வ.எண்.332/2015**

1) பொள்ளாச்சி தாலூக்கா, கோவில்பாளையம் அஞ்சல், செல்லப்பம்பாளையம், கதவு எண்.72 என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 63 வயதுடைய லேட்.சண்முகதேவர் மகன் திரு.தேவராஜ்.

2) பொள்ளாச்சி தாலூக்கா, கோவில்பாளையம் அஞ்சல், செல்லப்பம்பாளையம், கதவு எண்.73 என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 58 வயதுடைய லேட்.சண்முகதேவர் மகன் திரு.சிவராஜ்.

3) பொள்ளாச்சி தாலூக்கா, கோவில்பாளையம் அஞ்சல், செல்லப்பம்பாளையம், எண்.1/234 என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 56 வயதுடைய லேட்.சண்முகதேவர் மகன் திரு.அன்பழகன்.

... மனுதாரர்கள்/ 6 முதல் 8 பிரதிவாதிகள்

/ எதிர் /

பொள்ளாச்சி தாலூக்கா, கோவில்பாளையம் அஞ்சல், செல்லப்பம்பாளையம் கிராமம் என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 63 வயதுடைய திரு.கன்னிமுத்துதேவர் மகன் திரு.சேகர்.

... எதிர்மனுதாரர்/வாதி

1) பொள்ளாச்சி தாலூக்கா, கோவில்பாளையம் அஞ்சல், செல்லப்பம்பாளையம் கிராமம், முட்டியகவுண்டர் தோட்டம் என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 65 வயதுடைய திரு.கந்தசாமிதேவர் மகன் திரு.விஸ்வநாதன்.

2) பொள்ளாச்சி தாலூக்கா, பொள்ளாச்சி டவுன், மகாலிங்கபுரம் அஞ்சல், ரங்கேகவுண்டர் காலனி என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 60 வயதுடைய திரு.ஆறுமுகதேவர் மகன் திரு.லோகநாதன்.

3) பொள்ளாச்சி தாலூக்கா, பொள்ளாச்சி டவுன், மகாலிங்கபுரம் அஞ்சல், சங்கம்பாளையம் காலனி, கதவு எண்.2/44 என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 54 வயதுடைய திரு.சின்னப்பதேவர் மகன் திரு.சிவசுப்பிரமணியன்.

4) பொள்ளாச்சி தாலூக்கா, கோவில்பாளையம் அஞ்சல், செல்லப்பம்பாளையம் கிராமம் என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 60 வயதுடைய திரு.பழனிதேவர் மகன் திரு.முத்துச்சாமி.

5) பொள்ளாச்சி தாலூக்கா, கோவில்பாளையம் அஞ்சல், செல்லப்பம்பாளையம் கிராமம் என்ற முகவரியில் வசிக்கும் இந்து சுமார் 55 வயதுடைய திரு.பழனிதேவர் மகன் திரு.நடராஜ்.

... எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 5 பிரதிவாதிகள்

மனுதாரர்கள்/ 6 முதல் 8 பிரதிவாதிகளும், 1ம் எதிர்மனுதாரர்/வாதியும் தவிர்த்து 2 முதல் 6 எதிர்மனுதாரர்களோ, அவர்களுடைய ஆட்களோ காமாட்சியம்மன் மற்றும் மெய்யம்மன் கோவில்களில் சட்டத்திற்கு புறம்பாக நுழைந்து தன்னிச்சையான விழா நடத்தவோ மற்றும் கோவில் நிர்வாகத்தை தலையிடவோ கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள் : 25.07.2023.

இம்மனுவானது கடந்த 22.08.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.முரளி

அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

## இறுதி உத்தரவு

| | |
|---|---|
| 1. | முடிவில், இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள்/ 6 முதல் 8 பிரதிவாதிகளையும், 1ம் எதிர்மனுதாரர்/வாதியையும் சேர்க்காமல் 2 முதல் 6 எதிர்மனுதாரர்களோ, அவர்களுடைய ஆட்களோ தன்னிசையாக காமாட்சியம்மன் மற்றும் மெய்யம்மன் கோவில் விழாவை நடத்த கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது. |
| 2. | செலவுத் தொகை இல்லை. |

## செலவுத்தொகை பட்டியல்

மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர்கள் தரப்பில்

(இரு தரப்பிலும் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)

## சொத்துவிபரம்

கோயமுத்தூர் ரிடிடு, பொள்ளாச்சி ரிசப்டி, பொள்ளாச்சி தாலூக்கா, காப்பிலிபாளையம் மஜரா, செல்லபம்பாளையம் கிராமத்தில் வாதியின் தகப்பனார் கன்னிமுத்து தேவருக்கு பாத்தியப்பட்ட வீட்டு சொத்திற்கு ஒட்டினாற்போல் வடபுறம் சுமார் 10 செண்டு அளவுள்ள இடத்தில் கட்டப்பட்டுள்ள மேற்படி காமாட்சியம்மன் கோயிலும், மெய்யம்மன் கோயிலும் அதற்கு பக்கத்தில் உள்ள வடக்கு பார்த்த கோயில்களுக்கு சேர்ந்த அறையும் அதை சேர்ந்த இடமும் சகிதம். மேற்படி கோயில் நத்தம் புல எண்.179/17 ல் 408 ச.மீ. இடத்தில் உள்ளது.

இவ்வுத்தரவு 2023ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24 ஆம் நாள் என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

-----------------------------------

**<u>இறுதி உத்தரவு</u>**

ஐ.ஏ.06/2023 இன் ஓ.எஸ்.332/2015

நாள்: 24.08.2023

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

-----------------------------------